சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 25.09.2023

OS.NO. 407/2018

DW1: திரு. விஜயசிம்மன் (வயது 37 ) த/பெ. ஜெயபாலன்

(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

OS.No.407/2018 வழக்கு சொத்து நத்தம் சொத்து என்றால் சரிதான் . அந்த சொத்து அங்கப்பனின் தனிப்பட்ட சொத்து என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை, வரி ரசீது நீண்ட அனுபவத்தை காட்ட தாக்கல் செய்துள்ளேன் . அங்கப்பனின் அப்பா ஆண்டியப்பனுக்கு அங்கப்பன் தவிர்த்து ஆறுமுகம் , மற்றும் ராமையா என்ற மகன்கள் இருக்கிறார்கள். குறிப்பிட்ட இடத்தில் அங்கப்பன் மட்டும் வசித்ததால் அவருக்கு அந்த இடம் சொந்தமானது . வழக்கு சொத்து பூர்விக சொத்து என்றாலும் ஆறுமுகமும் , ராமையாவும் வெளியூரில் இருந்ததால் அங்கப்பனை அந்த சொத்தை பார்த்து கொள்ள சொன்னார்கள் என்று சொன்னால் அது சரியல்ல . வழக்கு சொத்தில் ராமையாவின் மகள்கள் சம்பூரணம், பூங்கோதை, ஆகியோர்களுக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் . 407/2018 வழக்கு சொத்தின் முதல் மாடியில் வாதி ராஜசிம்மன் அவரது அப்பா இறப்பதற்கு முன்பே குடியிருந்து வருகிறார் என்றால் 2014 ஆம் ஆண்டிலிருந்து அவர் முதல் தாரத்தின் மகன் என்பதால் அப்பா அனுமதியுடன் தற்காலிகமாக குடியிருந்து வருகிறார். எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 2018 ஆம் ஆண்டு

ஜனவரி 25 ல் இறந்தார். வாதி ராஜசிம்மன் அசல் வழக்கு எண் . 407/2018 ல் உள்ள வீட்டில் அவருடைய அப்பா ஜெயபாலனின் மகன் என்ற அடிப்படையில் தான் வசித்து வந்தாரே தவிர வாடகைதாரராக இல்லை என்று சொன்னால் சரியல்ல . பி.வா.சா.ஆ.19 என்பது ராஜாத்தி அம்மாள் எனது அப்பாவிற்கு எழுதி கொடுத்த உயில் ஆவணமாகும் . அந்த ஆவணத்தில் இரண்டாம் பக்கத்தில் எனது கணவருக்கு பிறகு வாரிசு கிரமனபடி கிடைத்தது என்று சொல்லியிருப்பதை தவிர எழுதி கொடுத்த ராஜாத்தி அம்மாளின் கணவருக்கு எவ்வாறு பாத்தியம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான் . அதே பி.வா.சாஆ.19 ஆவணத்தின் மூன்றாம் பத்தியில் ஜெயபாலன் சிறு வயதிலிருந்து அபிமான புத்திரனாக எடுத்து வளர்த்து வருகிறோம் என்று காண்பிப்பதற்கு எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . (எதிர் தரப்பில் பி .வா.சாஆ.19 பொருத்து கேள்வி கேட்கப்பட்டதை ஆட்சேபிக்கப்பட்டது). பி.வா.சா.ஆ.18 உயில் ஆவணம் எனது தகப்பனார் எழுதியது. அந்த ஆவணத்தில் இரண்டாம் பக்கத்தில் மூன்றாம் பத்தியில் வாதி ராஜசிம்மனுக்கு எவ்வளவு பணம் என்ன என்ன சொத்து கொடுத்தார் என்றால் 6 லட்சம் பணம் கொடுத்தார் சொத்து என்ன கொடுத்தார் என்று தெரியாது. (எதிர் தரப்பில் பி .வா.சா.ஆ.18 பொருத்து கேள்வி கேட்கப்பட்டதை ஆட்சேபிக்கப்பட்டது ). அவ்வாறு சொத்து கொடுத்திருந்தால் நான் நீதிமன்றத்தில் அதை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எந்த எந்த தேதியில் அந்த பணம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. எனது எதிர் வழக்குரையில் எனது அப்பா ஜெயபாலன் இறப்பிற்கு பின்பு வாதி எனது அம்மா கல்யாணியிடம் வாடகைதாரராக அமர்த்தப்பட்டேன் என்று சொல்லியிருகிறேன் என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை உரையில் பத்தி 4 ல் எனது அப்பா

ஜெயபாலன் உயிருடன் இருக்கும் போது வாதி ராஜ சிம்மனை வாடகைதாரராக அமர்த்தினார் அதற்கு வாடகை ரூ.4000 கொடுத்து வந்தார். வாதி ராஜசிம்மன் எனது அப்பா இருந்த போது வழக்கு சொத்தில் முதல் தளத்தில் வசித்து வந்தார் . எனது எதிர் வழக்குரையில் பத்தி 9 ல் சொல்லியுள்ள சங்கதி தவறு என்றால் சரிதான். வாதி ராஜ சிம்மன் வழக்கு சொத்தில் முதல் தளத்தில் இன்று வரை குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். சாட்சி தற்போது வாடகைதாரராக குடியிருந்து வருகிறார் என்று சொல்கிறார். அதற்கான வாடகை ஒப்பந்த பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . எனது அப்பா இறந்த பிறகு வாதி வாடகை கொடுப்பதில்லை. அவ்வாறு கொடுக்காததற்கு நான் இன்று வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான் . நான் சொல்வது தவறு என்றாலும் நான் சொல்லும் விபரம் எதிர்வழக்குரையில் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணம் எனது தாத்தா அங்கப்பன் கந்தசாமி என்பவருக்கு சொத்தை ஈட்டு கடன் பத்திரம் செய்த ஆவணமாகும். அதன் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் வீடு சிதலம் அடைந்ததால் அதன் அசல் பத்திரம் என் கைவசம் இல்லை . அந்த ஆவணத்தில் முதல் பக்கம் 10 வது வரியில் அடியிற் கண்ட சொத்தானது எனக்கு பூர்வீகமான பாத்தியப்பட்டு சர்வ சுதந்திரமாய் அனுபவித்து என்று கண்டுள்ளது என்றால் சரிதான் . வழக்கு சொத்தின் வீடு எனது அப்பா கட்டவில்லை என்றாலும் ராமையா, சின்னபொன்னு வருமானத்தில் தான் கட்டப்பட்டது என்றாலும் அது சரியல்ல . எனது அப்பா என்ன வியாபரம் செய்து வந்தார் என்றால் அரிசி வியபாரம் மற்றும் விவசாயம் செய்து வந்தார். எனது அப்பா ஜெயபாலன் என்ன வேலை பார்த்தார் என்பதையும் என்ன வருமானம் வந்தது என்பதையும் வருமான வரி கட்டினாரா என்பதையும் நான் சொல்லவில்லை என்றால் அது எனக்கு தெரியாது . பி.வா.சா.ஆ.13

ஆவணம் என்பது அசல் வழக்கு எண் . 84/2021ல் கண்டுள்ள சொத்தை பொருத்து கிரய ஒப்பந்த பத்திரம் என்றால் சரிதான் . கிரய ஒப்பந்த தேதி 12.11.2000ம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் மொத்த கிரய தொகை ரூ.50,000. அந்த ஆவணத்தில் அட்வான்ஸ் தொகை ரூ .25,000. அதில் வயலின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 50 செண்ட். பி.வா.சா.ஆ. 14 ஆவணம் என்பது அசல் வழக்கு எண் . 84/2021 வழக்கின் சொத்து பொருத்த கிரய பத்திரம் ஆகும். அந்த பத்திரத்தில் கண்டுள்ள தேதி 02.11.2001 என்றால் சரிதான். அதன் கிரய தொகை ரூ .40,000 என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் பக்கம் 3 இரண்டாவது பாராவில் கிரய பத்திரத்திற்கு முன் தொகையாக ரூ .30,000 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் பக்கம் 7ல் மொத்த விஸ்தீரணமாக 0.73 1/2 செண்ட் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.13 ஆவணத்திற்கும் பி .வா.சா.ஆ.14 ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், அந்த சொத்து ராஜசிம்மனின் அண்ணன் ஜெயசிம்மன் சுய சம்பாதியத்தில் வாங்கியது என்று சொன்னால் அது சரியல்ல. எனது அம்மா கல்யாணி, எனது அப்பா இறப்பிற்கும் முன்பும், பின்பும் இல்லத்தரசியாக தான் இருந்து வருகிறார் என்றால் எனது அப்பா இறப்பிற்கு முன்பு எனது அம்மா விவசாயம் செய்து வந்தார் . அவ்வாறு எனது அம்மா விவசாயம் செய்து வந்தார் என்று நான் அசல் வழக்கு எண் . 84/2021ல் வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் எனது அம்மாவிற்கு எந்த வருமானமும் இல்லை என்று சொன்னால் சரிதான். 27.01.2001 அன்று எனது அப்பா எனது அம்மாவிற்கு சொத்து கிரயம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான் . அந்த ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது. அந்த 27.01.2001ம் தேதியிட்ட கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8. வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள சொத்து

தவிர எனது அப்பா எனது அம்மாவிற்கு 4 ஏக்கர் சொத்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது அப்பா இறப்பதற்கு முன்பே அந்த சொத்துகளை விற்று விட்டார். வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள சொத்து இன்றைய தேதி வரை எனது அம்மா பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவண சொத்தின் வில்லங்க சான்றை தாக்கல் செய்தால் அது தெரியவரும் என்றால் சரிதான் . பி.வா.சா.ஆ.18 ஆவணத்தில் அசல் வழக்கு எண் .407/2018 ல் உள்ள சொத்தை மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அசல் வழக்கு எண் . 84/2021 ல் உள்ள சொத்தை பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் உள்ளீட்ட ஆவணங்கள் எதுவும் வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல . அசல் வழக்கு எண் .407/2018 ல் உள்ள வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்பதால் வாதி கோரியபரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும், அதைபோல அசல் வழக்கு எண் . 84/2021 ல் உள்ள வழக்கு சொத்து வாதி ராஜசிம்மனின் அண்ணன் ஜெயசிம்மனின் சுய சம்பாத்திய சொத்தானதால் அசல் வழக்கு எண். 84/2021 ல் வாதியாகிய எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் அது சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

/signed/

விஜயசிம்மன்

/signed/

திரு.S.விஜயகுமார், M.A., M.L.,

சார்பு நீதிபதி, இலால்குடி.